**தலைப்பு 8 - தேசிய பொலிஸ் ஆணைக்குழு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 அபிப்பிராயம்**

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2020 யூன் 12 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் ஏற்பாடுகளின் பிரகாரம், ஆணைக்குழு நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்குபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை தயாரித்து, அதனை பேணிச் செல்லப்படுவது தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்தக்கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகள் குறித்து மறுப்பேதும் இல்லை. |

| | | |
|---|---|---|
| மீளாய்வு செய்து, அதன் பிரகாரம் கட்டமைப்பினை ஆக்கபூர்வமாக மேற்கொள்ள தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும், அந்த மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியதாக இருந்த போதிலும், அவ்வாறானதொரு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.6.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்கு தொடர்பில் போதியளவான கணக்கு முறைமையொன்று மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையொன்றினை பேணிச்செல்வதற்காக கடன் மற்றும் முற்பணப் பதிவேடு, கடன் மற்றும் கடன் பட்டோர் முற்பணக்கணக்கு ஆகியன உரிய முறையில் பேணிச் செல்லப்பட வேண்டும். கடன் மற்றும் கடன் கொடுத்தோர் தொடர்பான விபரங்களை உரிய முறையில் எழுதி கோவைப்படுத்த வேண்டும் என்பது மற்றும் மாதாந்த திணைக்களத்தின் புத்தகங்கள் திறைசேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்பட்டதாக | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம், மாதாந்தம் திணைக்களத்தின் புத்தகங்கள், திறைசேரியின் புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்பட்டமைக்கான சான்றுபடுத்திய இணக்கக்கூற்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். |

சான்றுபடுத்தி, அதற்குரிய இணைக்கக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு சான்றுபடுத்திய பின் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவின விடயமொன்றிற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 14,450,000 தொகையான குழைநிரப்பு நிதி ஒதுக்கீட்டில், ரூபா 3,780,850 தொகை, அல்லது 26 சதவீதம் எஞ்சியிருந்தது. | குறைநிரப்பு ஒதுக்கீடுகள் உச்ச செயற்திறனுடன் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பில் மறுப்பு எதுவுமில்லை. |
| (ஆ) | 04 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,703,000 ஆன மொத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 708,801 தொகை எஞ்சியிருந்தது. அந்த சேமிப்பானது 21 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | நிதியேற்பாடுகளை உச்ச செயற்திறனுடன் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பில் மறுப்பு எதுவுமில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 3.1 எதிர்பார்த்த அடைவு மட்டத்தினை அண்மிக்காமை

---------------------------------------------------------------------------

#### 3.1.1 முறைப்பாட்டின் தன்மையின் அடிப்படையில் மக்களின் முறைப்பாடுகளை தீர்ப்பதிலான செயன்முன்னேற்றம்

-------------------------------------------------------------------------------------------------------------------------

பல்வேறு வகையான முறைப்பாட்டு முறைகளின் கீழ் 12 வகைகளின் கீழ் மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவிற்கு 1,568 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன், கடந்த வருடத்தில் அந்த எண்ணிக்கை 1,651 ஆக இருந்தது. மீளாய்வாண்டில் கிடைத்த முறைப்பாடுகளில் 1,151 அல்லது 74 சதவீதமானவை தீர்க்கப்பட்டிருந்ததுடன் கடந்த வருடத்தில் கிடைத்த முறைப்பாடுகளில் 1,191 எண்ணிக்கையானவை அல்லது 74 சதவீதம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) காவற்றுறையினால் நடவடிக்கை எடுக்காமை, அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் மற்றும் பக்கச்சார்புடைமை ஆகிய வகையிலான முறைப்பாடுகளின் கீழ் கடந்த வருடத்தினை போன்றே, மீளாய்வாண்டிலும் பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் 80 சதவீதத்தினை விஞ்சியிருந்தது. | காவற்துறை உத்தியோகத்தர்களிடமிருந்து இடம்பெறும் இவ்வகையான தவறுகளை குறைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண அலுவலகங்களிலிருந்து பதில் கிடைத்ததும், உடனடியாக இறுதியான பதிலை வழங்க நடவடிக்கை எடுக்கின்றன. |

| | | |
|---|---|---|
| (ஆ) தாக்குதல் மேற்கொள்ளல், இலஞ்சம் மற்றும் மோசடி, பொலிஸ் காவலில் இருக்கும் போது மரணமடைதல் மற்றும் போதைப்பொருள் குற்றங்கள் எனும் முறைப்பாட்டு வகைகளின் கீழ் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கிடைக்கப்பெற்ற பொதுமக்களின் முறைப்பாடுகளை தீர்க்கும் சதவீதம் 60 சதவீதத்திற்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | ஆணைக்குழுவிற்கு கிடைத்த இந்த முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்காக செயற்திறனான வேலைத்திட்டமொன்று ஈடுபடுத்தப்பட வேண்டும். | மாகாண அலுவலகங்களிலிருந்து பதில் கிடைத்ததும், உடனடியாக இறுதியான பதிலை வழங்க நடவடிக்கை எடுக்கின்றன. |

**3.1.2 பொதுமக்களின் முறைப்பாடுகளை தீர்ப்பதிலான செயன்முன்னேற்றம் - முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்ட மாகாணங்களின் அடிப்படையில்**

---------------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டினுள் மாகாணங்களின் அடிப்படையில் கிடைத்திருந்த மக்கள் முறைப்பாடுகள் மற்றும் அவற்றை விசாரணை செய்வதிலான செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ------------------------------------------ | --------------------- | -------------------------------- |
| (அ) கூடிய எண்ணிக்கையான முறைப்பாடுகள், அதாவது 540 முறைப்பாடுகள் மேல் மாகாண அலுவலகத்திற்கு கிடைத்திருந்துடன், அந்த முறைப்பாடுகளில் 32 | அதிகளவு எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைக்கும் அலுவலகங்களில், முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். | மாகாண அலுவலகங்களிலிருந்து பதில் கிடைத்ததும், உடனடியாக இறுதி பதிலை அனுப்ப நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| சதவீனமானவை அல்லது 172 எண்ணிக்கையானவை விசாரணை செய்வதற்காக எஞ்சியிருந்தது. | | |
| (ஆ) வட மத்திய, ஊவா, கிழக்கு மற்றும் வடக்கு மாகாண அலுவலகங்களுக்கு கிடைத்த முறைப்பாடுகள் விசாரிக்கப்படாத சதவீதம் சுமார் 25 சதவீதத்திற்கு அண்மியதாக இருந்தது. | மாகாண அலுவலகங்களில் முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். | மாகாண அலுவலகங்களிலிருந்து பதில் கிடைத்தவுடன் இறுதியான பதிலை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம். 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொண்டு, அந்த அறிக்கைகள் 2020 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய திகதியில் பொருள் மெய்மையாய்வு பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும். | பொருள் மெய்மையாய்வுச் சபையின் தலைவரின் சேவைக்காலம் நிறைவடைந்தமை மற்றும் ஊரடங்குச் சட்டம் காரணமாக அந்த பணிகள் தாமதமடைந்தன. தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

## 4. நல்லாளுகை

## 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவிற்காக உள்ளக கணக்காய்வு அலகொன்றினை நிறுவியிராததுடன் மீளாய்வாண்டினுள் உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வு பதவியொன்றினை ஏற்படுத்துவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற நடவடிக்கை எடுக்கின்றன. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

## 5.1 இணைப்புச்செய்யப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உள்ளபடியான பதவியணி 108 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதனுள் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை 37 ஆகும். | நிரந்தர உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | நியமன உத்தியோகத்தர்களால் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களை வழங்காமையால், சேவைத் தேவைப்பாட்டின் காரணமாக ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேல் மாகாணம் நீங்கலாக ஏனைய 08 மாகாணங்களில் 16 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், மாகாண பணிப்பாளர்கள் (ஒப்பந்த) 08 பேருக்கு மேலதிகமாக 05 புலனாய்வு உத்தியோகத்தர்கள், 02 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஒரு முகாமைத்துவ உதவியாளர் ஆகியோர் பணியாற்றுகின்றமை மாகாண அலுவலகங்களுக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் அனுபவம் வாய்ந்த விசாரணைக்குழுவொன்று அந்த அலுவலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ளனரா என்பது கேள்விக்குறிய வியடம் ஆகும். | மாகாண அலுவலகங்களுக்கு தேவையேற்படின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட வேண்டியமை | முறைப்பாடுகளை விசாரணை செய்ய தேவையான அறிவு, அது தொடர்பான புரிதல் மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்காக பயிற்சி பாடநெறிகளுக்கு உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளப்படுவர். |
| (இ) | மேல்/ தலைமை அலுவலகத்தின் 12 புலனாய்வு உத்தியோகத்தர்கள், 40 அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் 13 அலுவலக உதவியாளர்கள் உள்ளடங்களாக 109 பேர் சேவையில் ஈடுபடுகின்ற போதிலும், பிரதேச ரீதியில் சேவைகளை வழங்கும் போது பதவியணி பிரிந்து செல்லும் போக்கு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | ஆணைக்குழுவில் பிரிவுகளுக்கிடையே உத்தியோகத்தர்கள் பிரிந்து செல்லும் இடைவெளியை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | மாகாண அலுவலகங்களின் முக்கியமான மக்களின் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் விசாரணை மேற்கொள்ளல் மாத்திரம் இடம்பெறுவதுடன், தலைமை அலுவலகத்தில் பல்வேறு பணிகள் இடம்பெறுகின்றன. |